உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௧0.	காளயுக்தி௵ மார்கழி௴	பகுதி ௧௨.
Vol—X.	JANUARY 1919.	No. 12.

ராஜாங்க நிர்வாஹமும் கல்விமுறையும்.

இந்தியாவில் பொதுவாக முடித்துத்தீரவேண்டிய அவசியமான விஷயங்களுள் முதன்மைபெற்றுள்ளது ராஜாங்க நிர்வாஹ விஷயமே யாகும். இந்த ராஜாங்க நிர்வாஹமானது சரிவர அமைக்கப்படாம லிருப்பதற்குப் பெரிய தடங்கலாக நிற்பன, தேசமுற்றிலும் கல்வி யபிவிர்த்தி சரியாக நிறைவேற்றப்படவில்லையென்பதுடன் அக்கல்வியில் முன்னேற்றமடையத் தகுதியாகவுள்ளவர்க்கு ஊக்கங் கொடுத்துதவாமையும், அங்ஙனம் ஒருகால் முன்னேறிவந்தவர்கட்குத் தக்க நிலைமையொன்றையளித்துதவாமையுமாம்.

அரசாங்கத்தில் கல்வியிலாகாவானது பலதிறப்பட்ட விஷயங்க ளில் குறைகூறப்படவேண்டிய ஏதுக்களுடையதாக இருக்கின்றது. ராஜாங்கம் கல்வி விஷயத்தில் மிகவும் அச்ரத்தையைத்தான் காட்டி யிருக்கின்றது என்று குறைகூறப்படுகின்றது; ஏனெனில், அரசாங் கத்தார் கல்வியிலாகாவின் மேற்பார்வையைக் கைக்கொண்டு அறுபது வருஷங்கள் முடிந்திருந்தும் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு அறுவரே படித்த வகுப்பினர்களாகக் கருதப்படுகின்றார்கள்; ஏனை யோரிற் சிலர் எழுத்துவாசனையறிந்தவரும் பலர் அதையுமறியாதவரு மாக இருக்கின்றனர்.

இன்னும் கல்விகற்பிக்கப்பெறும் முறையிலும் குறைகூறப்படு கின்றது; ஏனெனில், கல்விமுறை தவறியமுறையிலாரம்பிக்கப்பட்டு, நாட்டுக்கு அவசியமில்லாத பல விஷயங்களையும் தேசமுறையில் கொடுத்தும், அவற்றைப் பரீக்ஷயின் நிமித்தம் நெட்டுருவேற்றியே னும் மனப்பாடம் பண்ணச்சொல்லியும் காலத்தை வீணே போக்கி விட்டிருக்கின்றது. இந்தியச் சிறுவர்க்கு இந்தியதேசத்துக்கு அவ சியமானவைகளைப் போதித்து அவர்களைத் தேசத்துக்கு வேண்டிய பல வழிகளிலும் புகவிடாமல், ராஜாங்க ஸ்தானங்களில் உத்யோகம் பெறவும் சட்டத்தையாதாரமாக்கொண்டு வாதித்துப் பிழைக்கவுமே இடங்கொடுத்துக்கொண்டிருக்கின்றது. மேல்நாட்டு முறையில் ஸ்தா பிக்கப்பெற்றிருக்கும் சர்வகலாசங்கங்களின் ஒழுங்குகளோ, மாணவர் களைத் தேசமுறைமையிலிருந்துமாற்றித் தேசபாஷையையேனும் தேசதர்மங்களையேனும் கேட்டவுடன் வெறுத்தொதுக்கும்படியாகத் திருத்திக்கொண்டிருக்கின்றன.

தற்போது போதிக்கப்பெற்றுவரும் ஆங்கிலமுறையான படிப் பானது, அரசாங்கத்தாரால் முதன் முதல் ஏற்படுத்தப்பெற்று அமு லுக்குக் கொண்டுவரப்படவில்லையென்பதையும், ஆங்கிலவியாபாரமும் ஆங்கிலக்கூட்டுறவும் இந்தியாவில் நூதனமாகப் பெருக ஆரம் பித்த அக்காலத்தில், அந்த வியாபாரத்தையும் கூட்டுறவையும் நடத் திக்கொண்டிருந்த சில வகுப்பார் தங்கட்கு அச்சமயம் அவசியமாக இந்துக்களுடைய உதவிவேண்டியிருந்தபடியால், இந்துக்களில் புத்தி நுட்பமுள்ள சில வகுப்பாரை அம்முறையில் புகச்செய்து புதுமுறை யில் கல்வி கொடுக்க ஆரம்பித்துத் தங்கட்கு ஊழியஞ்செய்பவர்களாக ஏற்படுத்திக்கொண்டார்களென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அப்படிக் கற்பிக்கப்பெற்றுவந்த அந்தச் சில வகுப்பாரே பாரம் பரிய மாய் அம்முறையில் பயின்று, அரசாங்கம் எந்தத்தேசத்து நன்மை யில் நோக்கக்கொண்டு நடத்தப்பெறுவதாயினும், அந்நோக்கத்தைச் சிறிதேனும் கவனியாமலே தாம் கற்பிக்கப்பெற்ற முறையில் உழை த்து வருகிறார்கள். இப்படி உழைத்துவரும் சில வகுப்பாருக்கு நமது காருண்ய கவர்ன்மெண்டாரால் ஏற்பட்டுவரும் உண்டியுடைக்குப்

போதிய வுதவியைக் கண்ணுற்ற ஏனைய இந்து வகுப்பினரும் அப் படிப்பு முறையில் புகத்தொடங்கினர்; எனவே, இந்தியாவிற் பலவகு ப்பினரும் அந்தத் தொற்று வியாதிக்குள்ளாகித் தேச நன்மையை முற்றும் மறந்திருக்கின்றனர். நமது காருண்ய கவர்ன்மெண்டார் தங்களது அரசாங்கமுறையை ஸ்தாபித்து நடத்துவதற்கு ஆரம்பித்த போதே, கல்வியிலாகாவிலும் கவனம் செலுத்தி இத்தேசத்துக்கு ஒவ்வாத ஆங்கிலநாட்டுக் கல்விமுறையைப் புறக்கணித்து இத்தேசக் கல்விமுறையைத் தொடங்கியிருந்திருப்பார்களானால், தற்போது படித்த சிலவகுப்பாருக்கும் படியாத பலவகுப்பாருக்கும் நேர்ந் திருக்கும் பெருங்குழப்பம் உண்டாயிருக்கமாட்டாது.

தேசப்பொருளாதார விஷயமாகக் கவனிக்கப் புகுந்தோமானால், நம்மிந்திய நாடானது, தொழிற்கல்வியில் தேர்ந்த தொழிலாளிகளில் லாக்குறையால் வருந்திக்கொண்டிருக்கின்றது என்பது நன்கு வெளி யாகின்றது. கலாசாலைகளில் தேசத்துக்கு வேண்டிய முறையான படிப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்குமானால், தொழிற்கல்வியிலும் பலமாண வர்கள் தேர்ச்சியடைந்து வந்து தமது தேசத்துக்கு வேண்டிய தொழில்களைத் தாமே புத்தி நுட்பத்துடன் தெரிந்துழைத்துத் தேச த்தின் பொருளைப் பெருக்கியிருப்பார்கள். அப்போது தேசத்துக்கு இத்துணை வறுமை ஏற்படமாட்டாது.

ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கும் இந்தப்பொருளாதார வறு மையே, இந்திய ஜனங்களின் கண்களைத் திறப்பித்து " இந்திய மக் கள் தமது தேசத்து விளைபொருள்களை யெல்லாம் தாமே கைபொ ருள்களாக மாற்றித் தமது தேசத்து மக்கட்கு ஸரஸமான விலைக்குக் கொடுத்துத் தாம் பெருத்த லாபத்தைப்பெற்றுத் தேசத்தின் பொரு ளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டு" மென்ற எண்ணத்தை யளித்திருக்கின்றது. ஆகையினால் காருண்ய கவர்ன்மெண்டாரும் தேசப் பொதுமக்களும் கல்விமுறையை நன்கு கவனித்துக் கலாசாலை களிலும் சர்வகலா சங்கங்களிலும் தேசத்தொழின்முறையின் பாடங் களையும் கற்பிக்கச்செய்து மாணவர்களிற் பலரை அம்முறையில்

தேர்ச்சிபெறும்படி திருத்துவார்களென்று உறுதியாக நம்பியிருக்கிறோம். அப்படிச்செய்ய முன்வரும்படியாகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது நடத்திவரப்பெறும் இந்தியக்கல்வி முறையானது மாணவரது குணங்களை விருத்திக்குக்கொண்டுவரும் செயலில் மிற்போக்குடனே தான் செல்லுகின்றது. பன்முறையும் நியாயத்துடன் மேதாவிகளாலே கண்டிக்கப்பட்டுக்கொண்டுதான்வருகின்றது. மாணவரது குணங்களைத் திருத்தவேண்டிய முறையில் கல்வி கற்பிக்கவேண்டுமென்பதனால், மதசம்பந்தமான படிப்பினை அவசியம் தரவேண்டுமென்று வற்புறுத்துகின்றோமென்றாவது அல்லது அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய விஷயங்களை மிகுதியும் தரவேண்டுமென்று வற்புறுத்துகின்றோமென்றாவது கொள்ளக்கூடாது. இந்திய மக்கட்கு மதப்பற்று இயற்கையாகவேயமைந்துள்ளது. கல்விச் சாலைகளிற் கற்பிப்பனவெல்லாம் அறிவின் பெருக்கத்தினை நாடினவைகளேதாம். ஆக இவ்விரு முறையுமல்லாத மற்றமுறை யாதாகுமெனின், மாணவனை நிறையுள்ளவனாக்கவேண்டுமென்றே கோருகின்றோம். அதாவது, உலகத்துப்பெரியோரால் "நன்னெறியினின்றுள்ளானென்று" அழைக்கப்படக்கூடியபடியான முறையில் திருத்தப்பெறவேண்டுமென்பதே. இம்முறையான நிறையினின்று பழகிவருவானானால், தனக்கு இயல்பாயமைந்துள்ள மதப்பற்றையும் கைசோரவிடாமல், தனக்கு அறிவு வளர்ச்சியினிமித்தம் போதிக்கப்பெறும் உபதேசத்தின் சாரங்களைச் சாதுமார்க்கத்தில் செலவிட்டுத் தேசத்துணைவனாகவும் வளர்ந்து, நினைவும் செய்கையும் ஒன்றெனநடந்து வருவான் என்பதே எமதுதுணிவு. இந்நிறைவே அவனுக்கும் அக்கலாசாலைக்கும் அவனுடைய ஆசிரியர்க்கும் அவனது பெற்றோருக்கும் தேசத்துக்கும் பெருந்தகுதியைத்தருவதொன்றாகும். இங்கே பெருந்தகுதியென்பது இந்தியாவுக்கேற்ற பெருந்தகுதியேயாகும். அம்ருதபஜார் பத்திரிகைக்காரர் சொல்லும் வண்ணம் ஐரோபாவில் ஆசிரியனும் மாணவனும், தந்தையும் மகனும் கணவனும்மனைவியும் இருந்துவருகிற ஒழுக்கம் இந்தியாவில் அவர்கள் இருந்து வரும் ஒழுங்கும்

முற்றும் மாறானவே யாகும். ஒரு இந்தியமாணவனும் ஒரு இந்திய மகனும் ஒரு இந்தியக் கணவனும் முறையே ஐரோப்பிய மாணவனை யும் மகனையும் கணவனையும் போல் நடந்தார்களே யானால் ஒழுங்குக் கேடுடையாரென்றே மதிக்கப்பெறுவார்கள். அப்படியே அத்தேசத் தானும் இத்தேசத்தான் மாதிரி நடந்து வந்தானானால், அத்தேசத் துப்பெரியோர் அவனைச் சிலாகித்துப் பேசமாட்டார். எனவே, தேசங்கள்தோறும் தருமம் வேறுபடுகிறதாதலால், இந்திய மாண வன் இந்திய தேசதர்மத்தில் கடமையும் ஒழுங்குமுடையவனாகப் பழக்கப்பெறவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம். இவ்விதமா கத் தேசதர்மத்தை யொட்டிக்கல்வியைப் போதிக்கும்படியாகச் செய் விக்கவேண்டிய கடமையானது அரசாங்கத்தாரைப் பொறுத்ததே யாகும். அவர்களையப்படிச் செய்யும்படியாகத் தூண்டுவது தேசத் தலைவர்களுடைய உரிமையுமாகும். அரசாங்கத்தர் அங்ஙனஞ் செய்ய முன் வராமலிருந்தார்களானால், தேசதர்மங்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் நோக்கமில்லாதவரென்றே கவனிக்கப்பெறுவார் கள். இந்தியர்க்குச் செல்வாக்கைக் கொடுத்து, அவர்களது ஆலோ சனையின்படியே தேசவொழுக்குகளின் பலதுறைகளையும் நடத்திக் கொண்டுவரும் ராஜாங்கமாக இருப்பின் இந்த ஒழுங்குகளெல்லாம் வற்புறுத்தப் பெறாமலே செய்யப்பெறலாம். ஆகையினால் தற்போ தைய ராஜாங்க நிர்வாஹத்தின் மேல் நாம் குறைகூறவேண்டியிருக் கிறது. இங்க ஒழுங்குடன் ராஜாங்கமுறைகளும் சிறுகச்சிறுக மாணவனுக்குப் போதிக்கப்பெற்று வரப்படின், தேசம் க்ஷேமத்தை யடைந்துவரும் என்பதில் சந்தேஹமே யிராதென்றுஎண்ணுகிறோம்

மேலும் இந்திய ஜனங்களிற் பெரும்பாலாரும் நிலத்தை நம்பி ஜீவிக்கிறவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் விஷயமாகக் கல் வித்துறை முன்னேறவில்லையென்றே சொல்லலாம். ஏனெனில், இவ் வகுப்பாருக்குப் படிப்பதற்கு வேண்டிய தனம் காலம் முதலிய சௌகர்யங்கள் கிட்டப்பெறாமலே இருக்கின்றன. இவர்களைப்பற்றி அரசாங்கத்தார் மிகுதியும் கவனம்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார் கள். அரசாங்கத்தார் இவ்வகுப்பார் வரையிலுமாவது கட்டாயப்

படிப்பும் இலவசப்படிப்பும் இராப்படிப்பும் அவசியம் ஆரம்பித்து உதவவேண்டும் இவ்வகுப்பாருக்குக் கல்விவிஷயமான இம்முறையை அரசாங்கத்தாரன்றி ஏனையோர் முன்னின்று முடிப்பது கஷ்டசாத்தியமான காரியமேயாகும். இம்முறையில் மேலே சொன்ன மூன்றுபடிகளும் ஆரம்பிக்கப்பெற்று இவ்வகுப்பார் படிப்பில்தேர்ச்சியடைந்தனராயின், இவர்களுடைய செலவும் மட்டுப்பட்டு விளைபொருளும் அதிகப்பட்டுப்பொருளும் மிகுதியாகும்; எனவே தேசத்தின் பொருளாதாரத்திற்கும் ஒரு பெருந்துணையாகலாம்.

இந்தியாவில் ஆரம்பப்படிப்பின் முறையை நடத்திவருவதில் தாலூகாபோர்டார்களும் டிஸ்டிரிக்ட் போர்டார்களும் முனிஸிபாலிட்டியார்களும் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தி வருகிறார்களாயினும், அத்துணையாகப் பலன் தருவதாகவும் விரைந்து வேலைசெய்து வருவதாகவும் தெரியவில்லை. இதனையும் அரசாங்க நிர்வாஹிகளே முன்னின்று ஊக்கிவரவேண்டும்.

ஆக நாம் இதுவரையில் கல்விமுறையில் உண்டாகும் பலவிதமான சங்கடங்களைக் குறித்தும் அது முன்னேற்றத்தையடைய எத்துணை இடையூறுகளிருக்கின்றனவென்பதையும் சுருங்கச்சொன்னோம். தற்காலக்கல்விமுறையைப்பற்றிச் சட்டநிரூபணச்சங்கங்களில் அடிக்கடி ஆலோசிக்கப்பெற்று வருவதாயினும், அச்சங்கத்தார்க்கு இது ஒரு பெரிய விஷயமாகத் தோன்றாததாலோ, இவ்விஷயத்தில் மிகுந்த சிரத்தை காட்டியுழைப்பவர்க்கு அங்குச் செல்வாக்கு இல்லாததாலோ பொருட்செலவையுன்னித் தள்ளிவைத்திருப்பதாலோ இந்திய ராஜாங்க நிர்வாஹத்தில் ஆலோசிக்கப்படவேண்டிய எல்லா விஷயங்களிலும் கல்விவிஷயம் முன்னேற்றத்தையடைந்துவரவில்லையென்று வருந்துகிறோம். கல்வியைப்பொறுத்தமட்டிலாவது ஜவாப்தாரியான நிர்வாஹத்தைப் படித்துத்தேசாபிமானம் ராஜாபிமானம் முதலியவற்றில் ஒழுங்கான முறையுடனுழைக்கக்கூடிய இந்திய கனவான்கள் கையில் ஒப்பித்தால், நாடும் ராஜாங்கமும் தேசஜனங்களின் நன்மையில், கருத்துக்கொண்டு உழைக்குமென்று ஊஹிக்கிறோம். ராஜாங்க நிர்வாஹத்தில் முதன்முதலாகமுன்னேறவேண்டுவது கல்வி

விஷயமொன்றேயாகும். இது தேசவொழுங்குடன் நிறைவேறுமாயின், கூடிய விரைவில் நிர்வாஹத்தின் மற்ற விஷயங்களும் ஒழுங்குக்கு வருமென்றே ஊஹிக்க இடமிருக்கிறது. தேசமுறையில் சீர்திருத்தப்பட்ட கல்வியையுடைய ஒவ்வொரு இந்தியனும், தனக்கு நிர்வாஹத்தில் உரிமையுண்டாகும்போது, தேசத்தின் ஒழுங்குகளிலும் தேச ஜனங்களின் தர்மங்களிலும் கவனஞ்செலுத்தாது அப்புறம் போகான். ராஜாங்கநிர்வாஹத்தில் உரிமைகளை மிகுதியும் பெற வேண்டுமென்று இந்தியர்கள் வாதிடுவதும் ராஜாங்கத்தாரும் சிறிது சிறிதாகவேனும் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுப்பதென்ற வாக்களித்திருப்பதும், மிஸ்டர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திலும் அவ்விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டிருப்பதாலும் ராஜாங்க நிர்வாஹத்தில் இந்தியர்கள் உரிமை பெரிதும் பெறுவார்களென்று கருதுகின்றோமாதலால், தேசமுறையான கல்வியிற்பயிலாதவர் அந்த உரிமையைப் பெற்றும் தேசத்துக்குக் கிடைக்கும் நன்மை சிறிதேயாகும் என்று அஞ்சுகின்றோம். ஆகவின் ஆரம்பப்படிப்பு உயர்தரப்படிப்பு கல்லூரிப்படிப்பு என்று சொல்லப்பெறும் மூன்று விதமான படிப்புமுறைகளிலும் தேசவொழுங்குக்கு ஏற்றபடிப்பு முறைகளையும் படிப்பிக்கவேண்டியதவசியமென்று வற்புறுத்துகிறோம்.

பத்திராதிபர்.

சிலப்பதிகாரம்.

(433-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்நூலிற்கு அடியார்க்கு நல்லாரென்பவர் ஒரு சிறந்த உரையியற்றியிருக்கிறார். அவர் தமிழில் உள்ள இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இயல்களையும் நெடுங்காலம் ஆய்ந்துதெளிந்தவர். அவர்க்கு உயிர்வாழ்க்கையின்பொருட்டு மேற்கொளவேண்டும் எத்தகைய கவலைகளும் ஒருசிறிதுமில்லையாம்படி "பொப்பண்ண காங்கெயர்கோன்" என்ற ஒரு செல்வன் அவரைப் பாதுகாத்துவா

அவர் மேற்கூறியாங்கு நூலாராய்ச்சிசெய்து முடித்து இந்நூலிற்கு உரை எழுதினார் என உரைச்சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

" பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே "

இந்நூலைச் சிறப்புவாய்ந்த நம் உரையாசிரியர் இந்நூலிற்கு உரைசெய்யத்தொடங்கி இந்நூலினை ஒருமுறை முற்றும் பார்த்துவிட்டுத் தலையையசைத்துக்கொண்டு,

எழுத்தின் றிறனறிந்தோ! இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குறையின்
றெழுதத் துணிவதே யான்!. என்கிறார்.

இந்நூலை யாய்ந்து பொருள் காணவேண்டின், எழுத்தறிய வேண்டும். எழுத்து—இலக்கணம். தொல்காப்பியம் முதலிய இயற்றமிழ் இலக்கணம்; பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயமுதலிய இசைத்தமிழிலக்கணம்; பரதம், அகத்தியமுதலாகவுள்ள நாடகத் தமிழிலக்கணம் எல்லாம் அறியவேண்டும் என்கிறார். மற்றும் இந்நூல் முழுவது மிளிருஞ் சொற்களுஞ் சொற்றொடர்களும் என்றுங்காணாத இனிமை மிக்கன, அவற்றின் பொருள்களோ மிக ஆழ்ந்தவை என்கிறார். இன்னும், இறையனாருரைக்கும் புரை கண்ட சங்கப்புலவர்களாகிய கூடலார் நமது நூலாசிரியரையும் இவ்வருமை நூலினையும் துதித்துப் புகழ்ந்தாரென்பதை, " கூடலார் கொண்டாடுஞ் செஞ்சொற்குடக் கோமுனி " என்று பாயிரங் கூறுவதையொட்டிப் பண்டைப் புலவர்களாலாராயப்பட்டுப் பழுதின்றி முடிந்துகிடந்த நூலென்பார் " முழுத்தும் பழுதற்ற முத்தமிழ் " என்கிறார்.

இன்னணம் உரையாசிரியரால் பாராட்டப்பெற்ற இந்நூற்பயிற்சிக்கு வேண்டப்படும் இசைத்தமிழ், நாடகத்தமிழ் இலக்கணங்கள் யாவும் அழிந்திறந்துபோயின. இயற்றமிழ் இலக்கணத்தும் தொல்காப்பியமொன்றே முதுமைப் பருவத்தால் பெரிதும் உருமாறி நிற்கின்றது.

இயற்றமிழ் இலக்கணத்துச் சிறந்து விளங்கும் பொருளிலக்கணம் பண்டைச் சங்க விலக்கியங்களுக்கு உயிர்நிலையாகக் கருதப்படும். அப்பொருளாராய்ச்சியைப்பற்றி உரையாசிரியர் பதிகவுரையினுள் ஏறத்தாழ ஆறுபக்கங்களில் எடுத்துரைத்திருக்கின்றனர். அவையிற்றைப்பற்றிச் சிறிது இறுதியிற் கூறுவேன்.

இனிச் சொற்களின் இனிமை, சொற்றொடரினிமை, அவற்றின் பொருளாழம் இவைகளைப்பற்றிப் பார்ப்போம்.

திரை விரி தருதுறையே! திருமணல் விரியிடமே!
விரை விரி நறுமலரே! மிடைதரு பொழிலிடமே!
மருவிரி புரிகுழலே! மதிபுரை திருமுகமே!
இரு கய லிணை விழியே! யெனையிடர் செய்தவையே!

இது கானல்வரி என்னும் பகுதியிலுள்ளதொரு பாட்டு. இரண்டு நண்பர்களுள் ஒருவன் மனத்தே ஏதோ கவலையுடனிருப்பதை மற்றையோன் அவன் முகவாட்டத்தாலறிந்து, ஏன், மயக்கம்? என்றனன். அதற்கவன் "என் அருமைநண்பனே! எங்ஙன் கூறுவேன், இன்று கடற்கரையுலாவற்குப் போனேன். அதன்பக்கத்தேயுள்ள மணல்மேட்டிலிருந்து தென்றல் நலம்பெறலாமெனச் சென்றேன். சென்றவிடத்துத் தென்பாலமைந்த சோலையிலிருந்து நறுமலர் நாற்றம் நண்ணியது. ஆங்குச் சென்றேன். அப்பொழில் பலவகை மர நெருக்கத்தால் நிழல் மிக்கது. அதனால் எங்கும் சுற்றிப் பார்த்துவர உள்ளே சென்றேன். அதனுள் ஒரு அழகிய பெண்ணைக்கண்டேன். அவள் கூந்தல் பின்னித்தொங்கவிடப் பட்டிருந்ததோர் அடையாளம் பற்றி அவளை இன்னும் மணம்புரியாத மங்கையெனத் தெளிந்தேன். பின்னர் அன்னாள் திருமுகத்தினைக் கண்டேன். எனக்கு அவள்பாற் றோன்றியது போலவே என்பாலும் அவளுக்கு ஓர் ஒப்புயர்வற்ற அன்பு தோன்றியதை அவள் குளிர்ந்த நோக்கத்தால் அறிந்தேன்—" என்றனன். மேற்கூறியபடியுள்ள அவள் நோக்கத்தினையும், அந்நோக்கத்தைத் தன்னகத்தே கொண்ட

திருமுகத்தினையும், அம்முகத்தினை அமைய நோக்குவதற்கு ஏதுவாகவிருந்த அவள் குழல்வகையினையும், அன்னாளைத் தன் அகத்தே கொண்டு விளங்கிய அப்பொழிலினையும், அப்பொழிலிடத்துப் போதற்குக் காரணமாகிய மலர் நாற்றத்தினையும், அம்மலர்நாற்றம் தென்றலொடுபுக்க மணல்மேடையினையும், இவை எல்லாவற்றையும் எய்துவதற்கு ஏதுவாகவிருந்த கடற்கரையினையும் வரிசைப்படுத்தி இவையெல்லாம் தன் கவலைக்கு ஏதுவாகியவை என்று கூறிமுடிக்கும் அப்பாட்டின் பொருள்வளத்தினைக் கவனியுங்கள். படிப்போர்க்குப் பொருள்மயக்கம் சிறிதுமின்றித் தனித்தனித் தமிழ்முழுச் சொற்களால் இனிது யாக்கப்பட்டிருக்கும் சிறிய சொற்றொடர்களை நோக்குங்கள். அவன் தன் மனத்தினைக் கவர்ந்துகொண்டு தன் கவலைக் கேதுவாக நின்றன வெனக் கூறும் துறை, மணல், மலர், பொழில், குழல், முகம், விழி இவைகளைவிட இவற்றினைக் குறிக்கவந்த இப் பாட்டு இனியதாதலைச் சிந்தியுங்கள்.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!

* * * * * *

மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!

இது இன்பச் சுவையி லீடுபட்டிருந்தோன் கூறியது. கண்ணிற்கு இனிமைசெய்வதாற் பொன் என்றும், ஊற்றின் இன்பத்தால் முத்து என்றும், உயிர்ப்பின் இனிமையால் விரை என்றும் சுவையின் இனிமையால் கரும்பு என்றும், இனிய மொழியை யுடைமையால் தேன் என்றும் கூறப்பட்டிருத்தலை உரையாசிரியர் விளக்குகிறார். மற்றும், கண்டவுடன் உயிர் மயக்கப்படுதலின் கொல்லியம் பாவை என்றும், அவ்வாறு அழியு முயிரை இமைப்பிற் றருவதால் ஆருயிர் மருந்து என்றும் கூறியதாகவும் விளக்குகிறார். மருந்து-அமிழ்தம், மலையிடைப் பிறக்கு மணி குழைபாது, அலையிடைப் பிறக்கும்

அமிழ்திற்கு இவ்வழகிய வடிவு இல்லை, யாழ் பார்வைக்கு நன்றா யிராது, ஆகவே அவைகளை உவமித்தல் தகாது என்று, அலையிடைப் பிறவா அமிழ்தே, என்றும் மலையிடைப் பிறவா மணியே யென்றும் யாழிடைப் பிறவா இசையே என்றுங் கூறியதாகவும் விளக்குகிறார். நண்பர்களே! இச் சிலப்பதிகாரம் என்னும் திருமாளிகையின் சீரினை நோக்கி வரும் ஒவ்வொருவரும் இவ்விடத்தே நின்று நின்று இதன் அழகினைப் பலமுறை பார்த்துப் பார்த்து மனஞ்சலியாதவர்களாகி, மற்றவிடங்களையும் பார்ப்பான் வேண்டி இதனைவிட்டுப்பிரியவேண்டி யிருக்கிறதே என வருந்திப் பிரிவது வழக்கமாகுமென்பதை உங்களிற் பலர் அறிந்திருக்கலாம்.

இந்நூலில் ஓரிடத்து நளன் சரிதம் குறிக்கப்படுகிறது.

அது "மெல்லியல் தன்னுடன் வெங்கா னடைந்தோன்
அடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடை யிருள் யாமத் திட்டு நீக்கியது." என்பது.

தமயந்தி ஒரு பெரிய சக்கரவர்த்தியின் மனைவி. எத்தனையோ செல்வத்தோடு சுக வாழ்வினையுற்றிருந்தாள். அவள் மெதுவான உடம்பு அரண்மனையை விட்டு வெளியே செல்வதற்கே தகுதியற்றது என அவள் மென்மைத் தன்மை கூறுவார் 'மெல்லியல்' என்றார். இனி அவள் சென்றவிடம் அத்துணை மெல்லியலார் மனத்தாலும் நினைத்தற்கு அரியதோர் காடு. இங்கே, நளன் அழைத்துச் சென்ற காடோ மழைஎன்பதே கண்டறியாத வெப்பம் மிகுந்த காடு. என்பதை 'வெங்கான்' என்று சுட்டினார். இன்னும் அது மிகப் பெரியதொரு காடென்பதை 'அடவிக்கான்' என்று சுட்டினார். அக் காட்டின் ஓரம் ஒதுக்குகளிலன்றி நடுவே விட்டு விலகினான் என்பதைக்காட்டவேண்டிக் கானகத்து என்றார். அத்தகையகாட்டில் விட்டுப் பிரிந்த நேரமோ இரவு என்பார் யாமத்து என்றார். இரவிலும் விடியற்காலையிலும் அன்றென்பார் இடையாமத்து என்றார். அந்நாள் சிறிதும் நிலாக்காலம் அன்றென்பார் இருள் யாமம் என்றார். அவளைப் பிரிவுணர்த்தித் தேற்றிவிட்டானு மல்லன் என்பார் இட்டு நீக்கியது என்றார்.

வெண்பாப் புகழேந்திபா ருரைத்த— "காதலியைக் கானகத்தே காரிருளிற் கைவிட்ட—பாதகனைப் பார்க்கப் படாதென்றோ" என்ற அருமை வெண்பா மேற்கூறிய அடிகளின் அழகில் ஈடுபட்டு, முன்னோ ருரையைப் பொன்னே போற் போற்றி யுரைக்கும் இலக்கணங் கொண்டு எடுத்துரைக்கப்பட்டதன்றோ?

இன்னும் இங்ஙனமே மற்றோரிடத்தும் கடல் யாத்திரையிற் கலனுடைந்து பேரிடருற்ற ஒரு வரலாறு குறிக்கப்படுகிறது.

" இடை யிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடை கலப் பட்ட * * எங்கோன்
* * * * * *
நன்னு வழி யின்றி நாள் சில நீந்த."

இச்சம்பவம் நடந்த காலம் மேற்கூறியபடி இருண்ட இரவில் நடு யாமமாம். நடந்த இடம் நாற் பெருங் கடல்களில் ஒன்றும் நடந்தபோது காலநிலை பெரும் புயற்காற்றும் என்பார்,

இடை யிருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல் என்றார். அவன் ஏறியிருந்த கலம் பாறையாலோ பிறிதாலோ தாக்குண்டு சிதறுண்டு போக, உடைந்த ஒரு துண்டினைப் பற்றி எவ்வித உதவியும் எய்தப்பெறுமல் உயிரைக் காப்பாற்றிக்கொண்டிருந்தான் என்பார், உடை கலப் பட்ட எங்கோன், நன்னு வழியின்றி நாள் சில நீந்த என்றார். இங்ஙனே, இந்நூலில் யாங்கணும் சொற்சொல்லாக எடுத்தாயுமிடத்துக்காணும் விசேடங்கள் பல.

இனி இந்நூலில் ஆங்காங்குக் குறிக்கப்படும் இயற்கை நவிற்சிகளைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

சோழவளநாட்டின் இயற்கைச் சிறப்பினைக் கண்டு வைத்துக் கூறுவார்.

உழாஅ துண் டொழி யுள் புக் கழுந்திட
கழா மயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரி புற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழும் பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரிய. என்கிறர்

ஒரு எருமை, உழுதற்கும் பயிரிடுதற்கும் வேண்டாத ஆழ்ந்த பள்ளத்துச் சேற்றில் படுத்திருந்து பின் எழுந்து வெளிப் போந்து தன்னைக் கழுவிவிடுவாரின்மையால் வெயிலிற் றிரிந்து தன் யாக்கையிற் பிடித்திருக்கிய சேற்றினை உரிஞ்சிப் போக்கிக்கொள்ள எண்ணி ஆங்கு வயலோரத்தே இடரிலுள்ள ஒரு நெற்சேரின் வைக்கோற் புரியில் உரிஞ்ச அதனாற் புரியற்ற அச்சேரின் நெல் பக்கத்தேயுள்ள வயலில் விளைந்து கிடக்கும் நெற்கதிர்களின் மீது சொரிந்தது என்பது இதனாற் குறிக்கப்படுவது. இதனால் இந்நாட்டில் குடிகளுக்கு உணவிற்காக வீட்டிற்குக் கொண்டுவரும் நெற்கள் போக மிஞ்சியவை அங்கங்கே வயலின் இடர்களில் சேர்கட்டிவைக்கப்படுதலும், இங்ஙனம் வைக்கப்படும் நெற்கள் அடுத்த ஆண்டுகளின் புதுவருவாய் ஏற்பட்ட காலங்களிலும் அங்கேயே தங்கியிருத்தலும் ஆகிய வளப்பம் மிகுதி குறிக்கப்படுதல் காண்க. இவ்வியற்கைகளை யெல்லாம் இன்றும் நம் நாடுகளிற் காணலாமன்றே.

இன்னும் இக்கதா நாயகனாகிய கோவலன் தன் காதற் பாத்தையாகிய மாதவியொடு, கடற்கரை யோரத்தில் ஒரு சோலையில் அமளி யிற்றிருந்து யாழ் வாசித்துக்கொண்டிருந்தான். அவ்விடமும் அமளியும்,

“ கடற் புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறை செய் வேலி யகவயி னாங்கோர்
புன்னை நீழற் புது மணற் பரப்பின்
ஓவிய வெழினி சூழ வுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண் காலமளி. ”

எனக் குறிக்கப்படுகின்றன.

கடற் காற்றுனது தம் மீது வீசும்போது நறுமணங்கமழ்தற் காகத் தாழை மரங்களை நாற் புறமும் வேலியாக வைத்து வளரச் செய்து நறுநிழலிற்காகப் புன்னைமரங்கள் வளர்க்கப்பட்ட இனிய மணற்பரப்புச் சோலைகள் பல அக்காலத்தே கடற்கரையோரத்தே உள்ளன. அவற்றில் தனக்குரியதாகிய ஒன்றில் கோவலன் மாதவியோடு வீற்றிருந்தான். அவ்வமளி யானைக்கொம்பால் செய்த குறுகிய கால்களையுடையது. மேலே சித்திரத்திரைகள் வேண்டும் பக்

கங்களில் இறக்கிக்கொள்வதற்காகக் கட்டப்பட்டும் அழகிய மேற் கட்டுக் கட்டியுமிருந்தது என்கிறார். மிக்க செல்வம் பொருந்திய பட்டினங்களின் கடற்கரை யோரத்தே செல்வர்கள் தங்கள் பொழுது போக்கிற்காக இத்தகைய சோலைகளை யமைப்பதும் அவைகளுள் மரங்களின் அடியில் சோபா முதலிய ஆசனங்களை அமைத்திருப் பதும் இயற்கையே யாமென்பது யாமறிவோமன்றே.

இன்னும், கோவலன் தன் அருமைக் காதலியொடு மதுரைமா நகர்க்குச் செல்லும்போது, வேடர்கள் சேரியில் ஓரிடத்தே வேடர் கள் கூடி ஒரு சிறுபெண்ணிற்கு அணிகலம் ஆடைச்சிறப்புக்கள் செய்து தங்கள் குலதெய்வக்கோலம் அமைத்துக் கொண்டாடுகிறார்கள்.

சிறு வெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறு நெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி
யிளை சூழ் படப்பை யிழுக்கிய வேனத்து
வளை வெண் கோடு பறித்து மற்றது
முளை வெண் டிங்கள் என்னச் சாத்தி
மறங் கொள் வயப்புலி வாய் பிளந்து பெற்ற
மாலை வெண்பற் றாலி நிரை பூட்டி
வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்
துரிவை மேகலை யுடீஇ.

மிக்க வீரத்தன்மை யுடைய வேடர்கள் பொன்னும் மணியும் கூட்டிச்செய்த அணிகலன்களைச் சிறிதும் மதியாது தமது வீரத் தன்மையால், படையும் கலங்கும் பாம்பினையும், தங்களையும் தங்கள் அடைப்பினையும் மதியாது தங்கள் தோட்டத்தினுட் புகுந்து தம்மையுங் கண்டுழி எதிர்த்து நின்ற பன்றிப்போரில் தாம் வென்று கைக்கொண்ட கோட்டினையும் இன்னும் அங்ஙனமே அஞ்சாது மூர்க்கத் தன்மையோ டெதிர்த்த புலியின் பற்களையும் அணிகளாக அணிந்தும் அப்புலியின் றோலினை ஆடையாக அணிந்தும் மகிழும் வீர இயற்கைத் திறத்தினை மேற் கூறியபடி எடுத்துரைப்பக் கண்டு மகிழாதார் உண்டோ? (தொடரும்)

R. வேங்கடாசலம்பிள்ளை.

மாககாவ்யம் அல்லது சிசுபாலவதம்.

(இ ர ண் டா வ து ஸ ர் க் க ம்)

(413-ம் பக்கத் தொடர்ச்சி)

(இவ்விதம் யுத்த யாத்திரைக்குப் புறப்படவேண்டிய தவசிய மென்று பலராமர் நிச்சயப்படுத்திவிட்டு, ஒருகால் சாஸ்திரமறிந்தவரான உத்தவர் தம்முடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாகச் சொன்னுல் என்ன செய்வதென்று நினைத்துக்கொண்டு, அவர் விரோதமாகச் சொல்லாமலிருக்கும்படியாகக் கபடமாய்ப் பொதுவிஷயமாகச் சொல்லுவதுபோல நடித்துக்கொண்டு பின் வருமாறு சொல்லலுற்ருர்.)

"கெட்டிக்காரர்களாயும் ஸா து க் க ளா யு முள்ளவர்களுடைய வார்த்தைகள், வாசாலகத்துடன் பேசப்பட்டனவாக இருந்தபோதிலும் பிரதிகூலமாகப் பேசுபவர்களை யூமர்களாக்கிவிடுகின்றன. பேசுபவர் கேவல மந்தர்களாக இருந்தார்களாயினும், அனுகூலமாகப் பேசும்பக்ஷத்தில், அவர்களுடைய வார்த்தைகளைக் கவுரவப்படுத்துகின்றன."

(கருத்து:—கிருஷ்ணன் கெட்டிக்காரராயும் ஸாதுவாயுமிருப்பதால் அவருடைய வார்த்தை க வு ர வ ம் பொ ரு ந் தி ய து. தம்முடைய அபிப்பிராயப்படியே உத்தவர் கெட்டிக்காரராகவும் வாசாலகராகவும் இருந்தபோதிலும் பிரதிகூலமாகப் பேசினாரானுல், அவருடைய வார்த்தைகட்குக் கவுரவம் ஏற்படாதென்றும், தாம் மந்தராக இருந்தாலும் கிருஷ்ணனை யநுசரித்து அநுகூலமாகப் பேசப் புகுவதால் தம்முடைய வார்த்தைகட்குக் கவுரவம் ஏற்படுமென்றும், ஆகையினுல் உத்தவர் இதனையறிந்துகொண்டு பிரதிகூல்மாகப்பேசாமலிருக்கட்டுமென்பது பலராமருடைய அபிப்பிராயம்.)

(ஆயினும் உத்தவர் சாஸ்திரமறிந்தவராகையால், அவர் சொல்வனவற்றைத் தடுக்க முடியாதே என்று தமக்குள்ளே ஒரு ஆக்ஷேபஞ் செய்துகொண்டு அதற்கும் ஸமாதானம் சொல்லுகின்ருர்.)

"மந்தனுக இருந்தாலும் அநேகம் நீதிகளை வாசித்து இருப்பானேயாகில், அரசர்க்குவேண்டிய குணங்கள்-6, சக்தி-3, ஸித்தி-3, உதயம்-3, என்றுதான் வ்யாக்கியானம் செய்யத் தெரியுமேயொழிய

கைமேலிருக்கும் காரியத்தை ஆலோசித்து அக்காரிய ஸாதனமாக ஒன்றும் செய்யத் தெரியாது. அப்படி, கார்யத்தை ஆலோசித்துப் பார்க்காமல், மந்தனுனவன், தான் பால்யத்தில் வாசித்த சாஸ்திரங்களைப் புரட்டி வாயாடித்தனமாகப் பேசினல், அப்பேச்சானது, வில்லிலிருந்து குறிதவறிக் கீழே விழுந்து வீணைப்போன பாணத்திற்கு ஸமமானது.”

(கருத்து:—உத்தவர் வாசித்தவராக இருந்தாலும் பிரதிகூலமாகப் பேசினாரானல், அவருடைய வார்த்தை மதிப்பற்றதாக ஆகும் என்பது பலராமருடைய அபிப்பிராயம்.)

“எப்படியிருந்தாலும் சாஸ்திரங்களைக் கொண்டு ஆராய்ந்து ஆலோசனைசெய்த பிறகுதான் காரியத்தைஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லும்பக்ஷத்தில், புத்தமதத்தினருக்கு அவர்களுடைய சரீரத்தில் ரூப வேதன விஞ்ஞான ஸமிஞ்ஞா ஸம்ஸ்காரமென்றுசொல்லப்பெற்ற ஐந்து ஆத்மாக்களைத் தவிரவேறு ஆத்மா இல்லையென்று சொல்லப்படுகிறதுபோல், அரசர்கட்கும் காரியங்களில், அவற்றையாரம்பிக்கும் உபாயம் (1), மனிதர்கள் பணம் முதலியவற்றைச் சேகரித்தல் (2), தேச காலங்களையறிந்து கொள்ளுதல் (3), இடையூறுகளை விலக்கிக்கொள்ளுதல் (4), காரிய ஸித்தி (5) ஆகிய இவ்வைந்து விஷயங்களைத் தவிர வேறு விஷயங்களைக் குறித்து ஆலோசனை கிடையாது. ஆகையால், இவ்வைந்து விஷயங்களைத் தவிர, மற்றைய சாஸ்திர விஷயங்கள் அனுவசியங்களேயாகும். காரிய ஸாதனமாகவுள்ள இவ்வைந்து உபாயங்களும் தெரியாதுபோனல் சாஸ்திரம் வாசித்தும் பிரயோஜனமில்லை. புத்திமாத்திரமிருந்தாற்போதும்; எப்போதேனும் சாவகாசம் இருந்தபோது ஆலோசனைசெய்துகொண்டு பிறகு காரியத்தை யாரம்பிக்கலாமென்று காலதாமதஞ் செய்யக்கூடாது. சதுரங்க ஸைந்யங்களாற் சூழப்பெற்றவனுக இருந்தாலும், தைரியமற்றவன் தனது சத்துருக்களிடமிருந்து தனக்கு அபாயம் வருமெனப் பயந்து அதிகநேரம் யுத்தகளத்தில் இருக்கப் பயப்படுவதுபோல, மந்திராலோசனை செய்யப்பெறும் விஷயமானது, நமது மனதுக்குள் நமது ஸர்வாங்கங்களாலும்

மறைக்கப்பட்டிருந்தபோதிலும் காலதாமதஞ் செய்தால் பிறருக்கு வெளியாய்விடுமென்ற பயத்தினால் தாமதிக்கத்தகாது. மேலும் தன்னுடைய க்ஷேமம் பிறனுடைய நாசமாகிய இவ்விரண்டுபதாம் நீதிகளை யொழிய மற்றைய நீதிகளெல்லாம் நீதிகளாகமாட்டா. இவ்விரண்டு நீதிகளையும் அங்கீகரித்துக்கொண்டே எத்தனை கெட்டிக்காரர்களுங்கூட உயர்ந்த பதவியை யடைந்திருக்கின்றார்கள். மகாத்மாக்களான அரசர்கள், அதிக ஐச்வர்யம் தங்கட்கிருப்பதால் சத்துருவினிடத்தில் அஜாக்கிரதையாயிருந்து அவனைக் கொல்லும் வழியைத் தேடாமல் காலதாமதம் செய்வது நியாயமல்ல. திருஷ்டாந்தமாக ஸமுத்ரம் தன்னுடைய எல்லைவரைக்கும் நிரம்ப நீரை வைத்துக்கொண்டு பூரணமாக இருந்தபோதிலும், இன்னும் தான் பெருகவேண்டுமென்ற விருப்பத்தினால் சந்திரோதயத்தை விரும்புகின்றதல்லவா? அவ்விதமே அரசர்களும் எத்தனை உயர்ந்த ஸ்திதியில் இருந்தபோதிலும், மேலும் மேலும் விருத்தியடையும் உபாயத்தையே தேடிக்கொண்டிருத்தல்வேண்டும். ஒருவன் அற்பத் திரவியத்தை வைத்துக்கொண்டு தனக்கு அந்தத் திரவியம் சாசுவதமானது என்று நினைத்துக்கொண்டு, மேல் நடத்தவேண்டிய காரியங்களில் உதாஸினனாக இருந்தானானால், அவனுக்குப் பகவான் அந்தத் திரவியத்தை விருத்தி செய்யமாட்டார். அப்படிப்போலப் பராக்கிரமமிருந்தால் ஒருவன் தனது க்ஷேமத்தை ஸம்பாதிக்க முடியும். தன்னுடைய க்ஷேமத்தை விரும்புகின்ற ஒருவன், தன்னுடைய சத்துருக்களை அடியோடு தொலைத்துத் தான் க்ஷேமத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, மஹாந்தகாரமான பேரிருளைத் தொலைத்துக்கொண்டுதானே சூரியன் தனது கிரணங்களை விட்டுப் பிரகாசிக்கின்றான். ஆகையினால் சத்துருவை அடியோடு அறுக்காமற் போனால், தன்னிருப்பை க்ஷேமப்படுத்திக்கொள்ள முடியாது. ஜலமானது தன்மேற் பரவிக்கொண்டு தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் புழுதிகளைச் சேறாக்கிக் கீழே தள்ளிவிடாமலா தான் நிலைத்து நிற்கிறது; ஆனால், இந்தச் சிசுபாலனோ ஒருவன். இவனைக்குறித்து இவ்வளவு யோசனையா? இவன் நம்மை என்ன செய்யமுடியும்? என்று

நினைத்துவிட்டுச் சும்மாவிருக்கக் கூடாது. ஒரு வகையாகவே இருந்தாலும் ஒருவன் சத்ருவென்று கிளம்பிவிட்டானானால், அவன் நாசமாகும் வரையில் நமக்கு க்ஷேமம் ஏது? உதாரணமாக ராகு ஒருவனாக இருந்தாலும், ஆயிரக்கணக்கான தேவதைகள் எதிரிலிருக்கையிலுங்கூடச் சந்திரனைப் பிடிக்கிறானே? மற்றொருவனான கேது என்பவன் சூரியனையுங்கூடப் பிடிக்கின்றானல்லவா? மேலும் இந்தப் பையல் சிசுபாலனோ க்ருத்ரும சத்துரு, அதாவது ஏதோ ஒரு காரணமாகச் சத்துருவென்று கிளம்பினவன். ஸஹஜ சத்துருக்களோ அல்லது ஸஹஜ மித்துருக்களோ ஸாதாரணமாக இருந்துவிடுவார்கள்; ஆனால், ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு "நான் சத்துரு, நான் மித்துரு" என்று வருகின்றவர்கள் படுத்தும் பாடு சொல்லி முடியாது. இந்தப் பையலும் அப்படித்தான். ஆனால் நான் சொல்லிவந்தபடி, "இந்தச் சிசுபாலன் நமது அத்தை மகனானதால், நமக்கு ஸஹஜ சிநேகிதனாகிவிட்டான். அவனை ஒன்றுஞ்செய்யக் கூடாது. என்று நினைத்துவிடலாம். அப்படியிருந்துவிடக் கூடாது. ஏனெனில், "உபகாரம் செய்யும் ஒரு சத்துருவினிடம் சேர்ந்து கொள்ளலாம். அபகாரஞ் செய்யும் மித்திரனுடன் சேரக்கூடாது என்பது நியாயமன்றோ? ஏனென்றால், ஆராய்ந்து பார்க்குங்கால், சத்துருவகையிலிருந்தாலும் மித்துருவகையிலிருந்தாலும் நாம் கவனிக்கவேண்டாம். நமக்கு உபகாரஞ் செய்கிறவர்களை மித்துருக்களாகவும் அபகாரஞ் செய்கிறவர்களைச் சத்துருக்களாகவும் எண்ணவேண்டும். ஆகையினால், இந்தச் சிசுபாலன், உண்மையாகவே நமக்கு அத்தை மகனாக இருந்தபோதிலும் மித்ரனாகமாட்டான்; ஏனெனில், அவன் நமக்கு எப்போதும் அபகாரமே செய்துகொண்டிருக்கிறபடியால் சத்துருவேயாவான். கிருஷ்ணா? இவன் செய்துகொண்டிருக்கும் அநியாயங்களைக் கவனித்துப்பார். எல்லாவற்றிற்கும் ஒரு பெண்மணியே காரணமாகின்றாள். அவனுக்கென்று நிச்சயம் செய்துவைத்திருந்த ருக்மிணியை நீ அபஹரித்துக் கொண்டுவந்துவிட்டதனால், அவன் நமக்குச் சத்துருபாவத்தை அதிகமாகக் காட்டிக்கொண்டிருக்கின்றான். சூரியன் மேரு பர்வதத்தின் அடிவாரத்திலுள்ள பேரிருளை த்வம்சம் செய்வதுபோல நீ நரகாசுரனை வதஞ்செய்யப் போயிருந்த

போது, சிசுபாலனுகிய அவன் இந்த ஊரை நடுங்கும்படியாகச் செய்து விட்டான். இவ்வூரிலுள்ளவர்களைப் படுத்தின பாடு சொல்லவே முடியாது. பாவிகளின் செய்திகளைப்பற்றிப் பேசினுலும் பாபம் சம்பவிக்குமல்லவா? ஆகையினுல் கீழ்ச்சொன்ன காரணங்களால் அவன் நமக்கு அத்தை மகனுகவும் ஸஹஜ மித்திரனுகவு மிருந்தபோதிலும், சத்துருவேயாகின்றுன். மேலும், ஏ! கிருஷ்ணு!! நீயோ இந்தப் பயலைத் தொலைத்துவிடுவதற்கு வேண்டிய உபாயத்தை முன்னமே தேடி விட்டாய். ப்ரயத்தனமும் செய்துவிட்டாய். அப்படிச் சத்துருவைக் கொல்ல ப்ரயத்தனஞ்செய்தும், இந்தத் தர்மபுத்திரராகிய யுதிஷ்டிரர் விஷயமாக யாகத்திற்குச் செல்வதை நிமித்தமாகக்கொண்டு, நீ கால தாமதம் செய்து அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால், ஒரு புதரில் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைக் கொட்டிப் பிறகு, அந்த உஷ்ணக் காற்று வீசும்படியான எதிர்ப்பிரதேசத்தில் படுத்துக்கொள்பவருக்கு ஸமமாக நீயும் ஆய்விடுவாய். நமது பந்துவினிடத்திலுமா இத்துணை வைரம் கொள்கிறது என்று நீ என்னைக் கேட்கலாம். பந்துவாக இருக்கட்டும். அபந்துவாக இருக்கட்டும் ஒரு தரம் அபகாரம் செய்தால் பொறுத்துக்கொள்ளலாம் அடிக்கடி அபகாரமே செய்துகொண்டிருப்பவனையார்தான் பொறுத்துக்கொள்வார். இப்படிச் சொல்வது நியாயமில்லை. ஒரு ஆண்மகனுக்குப் பொறுமையே பூஷணமல்லவா? நாம் பொறுத்துக்கொள்ளப்படாதா? என்று நீ கேட்கலாம். பெண்கட்கு நாணமிருக்கவேண்டுவது அவசியம்தானென்றுலும், இரவில் தன் புருஷனும் தானுமாகஇருக்குமிடத்திலுங்கூட நாணத்துடன் இருந்தால், பலன் எங்ஙனம் கிட்டாதோ அப்படியேபுருஷனுக்குப் பொறுமை பூஷணமானதென்றுலும், தனது சத்ரு தன்னையவமானப் படுத்துங்காலத்திலும் பொறுமையுடனிருந்தால் அது அவமானத்தையே கொண்டுதருமல்லவா? பராக்ரமத்தை விட்டுவிட்டுத் தன் சத்துருவினுல் சேரும் அவமானங்களை யெல்லாம் ஸஹித்துக்கொண்டு வாளாயிருக்கும் ஒரு ஆண்மகன் பிறந்து யாது பிரயோஜனம். அவன் தன் தாய்க்குக் கர்ப்பவேதனையைக் கொடுத்துவைத்தது தான் மிகுந்ததாகும். இவன் பிறவாமலிருந்தால், அதுவே பெரிய உபகாரமாக இருந்திருக்கும். உதாரணமாக, அசேதனமாகக் கீழே படிந்துகிடக்

கும் புழுதிகூட வல்லவா தன்னை மிதித்து நடப்பவரை மிதிப்பதற்கென்று, உயரக் கிளப்பி நடப்பவர்மேல் படிகின்றது ஆகையினால், தனது அவமானத்திலும் பொறுமைபோடிருப்பான் அப்புழுதிக்கும் கடையானவனேயாவான். ஒரு சேதனனாயிருக்கும் புருஷன் மனிதனெனப் பிறந்துவிட்டால், தனது ஜாதி க்ரமம் குணம் ஆகிய இவைகளால் யாதொரு பிரயோஜனத்தையும் அடையாமற்போனால் அவனுடைய ஜன்மம் எதற்கு உபயோகம்? பிறந்த குழந்தைகட்குத் தோன்றியபடி யெல்லாம் யாதொரு காரணத்தையும் பற்றாமல் பெயரிட்டழைப்பதுபோல் யாதொருபிரயோஜனமுமில்லாமல் முடிகின்றது அவனது பிறப்பாம் என்பர். மலைக்கு உயரமிருக்கிறது ஆழமில்லை; ஸமுத்திரத்திற்கு ஆழம் இருக்கிறது உயரமில்லை; ஒரு வீர புருஷனிடத்திலோ பிறரால் வெல்லத்தகாத உயரம் ஆழமாகிய இரண்டும் இருக்கின்றன. மேலும் சத்துருக்களிடத்தில் தயை வைப்பது அனர்த்தகன். உதாரணமாக, சூரியன் சந்திரன் ஆகிய இவ்விருவரிடத்திலும் குற்றம் ஒன்றாக இருந்தபோதிலும், இருவரையும் பிடிக்கப் பீடிக்கும் பாம்பு சூரியனிடத்தில் உஷ்ணமிருப்பதால் விரைவில் விட்டுவிடுகின்றது; சந்திரனிடத்தில் மனோஹரமான குளிர்ச்சியிருப்பதால் அவனை விரைவில் விட்டுவிடுகிறதில்லை. ஆகையால் குளிர்ந்த ஸ்வாபமுள்ள சந்திரனுக்கு ஏற்பட்ட லாபந்தான் சத்துருவினிடம் தயை வைத்தவனுக்கு என்பதனை நினைந்துகொள்ள வேண்டும். சத்ருவினிடத்திலே தயை வைப்பது பராக்ரமசாலிகளுக்கு அழகாகுமா? பேடியலலவா சத்துருவினிடத்தில் தயை வைப்பன்? அப்படிப் பௌருஷமில்லாத பேடிகளின் கதி யாதாகுமென்றால் தனக்குச் சத்துருவான காற்று மெதுவாயடித்தபோதிலும் அற்பமாகவும் பலமற்றதாகவுமுள்ள புல் அந்தச் சத்துருவிற்குத் தலைவணங்கிக்கொடுப்பது போல, தாங்களும் தங்கள் சத்துருக்களுக்குச் சரணாகதி பண்ணவேண்டியதுதானாம். பராக்கிரமசாலியானவன் வெகுதூரத்திலிருந்தபோதிலும் அவனைப் பராக்கிரமசாலிகளில் ஒருவனாகத்தான் கவனிப்பார்கள். உதாரணமாக, பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம்புரிய விரும்புகின்றவொருவன், நான்கு பக்கங்களிலும் அக்கினியை வளர்த்துக்கொண்டு, வெகுதூரத்திலுள்ள சூரியனை

ஐந்தாவது அக்கினியாக வைத்துக்கொள்ளுகிறானே யொழிய வெகு தூரத்தில் இருக்கிறானே என்று அவனைத் தள்ளிவிடுவதில்லை. கீர்த்தி பெறவேண்டுமென்ற ஆவலொருவனுக்கு இருக்கும்பக்ஷத்தில், பௌருஷம் அவசியம் இருக்கவேண்டும். தனது கீர்த்தி தேவலோகத்திற்கு எட்டவேண்டும் என்று ஒருவன் விரும்பினால் சத்துருக்களை மிதித்தேறும் படிகளாகக் கொண்டு பௌருஷத்துடன் அவர்கள் தலைகளின்மேல் காலைவைத்துத் தான் அக்கீர்த்தியைத் தேவலோகத்திலேற்றவேண்டும். ஆகையினால் சத்துருக்களிடத்தில் தயைவைத்தலே கூடாது. வைத்தால் அபகீர்த்திதான் நேரிடும். உதாரணமாக சந்திரன் தனது மத்தியில் ஏதோ ஒரு மிருகத்தை வைத்துக்கொண்டிருப்பதால்தான், மிருகத்தையடையாளமாக வைத்துக்கொண்டிருப்பவனென்றும் களங்கியென்றும் அபவாதப்பெயரை யடைந்திருக்கிறான். சிங்கமானது காட்டிலுள்ள மிருகங்களை அடித்துத்தொலைத்து த்வம்ஸம் செய்வதால், "மிருகேந்திரன்" என்று சொல்லப்பட்ட கௌரவமான பட்டத்தை யடைந்திருக்கின்றது. ஆகவே சத்துருக்களை யடித்துத் தொலைத்துத்தான் வீரனென்ற பெயரைப்பெறவேண்டும். சத்துருவை ஸாம பேத தானங்களாகிய இம்மூன்று உபாயங்களாலே யல்லாமல் நான்காவது உபாயமாகிய தண்டோபாயத்தால் வென்றுவிட ஆலோசிக்கப்படாது என்று மனு கூறியிருக்கின்றாரே என்று நினைக்கலாகும்; அது மனுவினுடைய பூர்ண அபிப்பிராயமன்று; ஏராளமான தன நஷ்டத்தையும் ஜனநஷ்டத்தையும் கருதியே அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். யுத்தத்தினால் மாத்திரம் ஜயிக்கத் தகுதியுள்ளவனை யுத்தத்தினாலேயே ஜயித்தல்வேண்டும். அப்படியல்லாது தனக்கு அபகாரஞ் செய்துகொண்டிருக்கிறவனை சத்துருவினிடத்தில், சாந்தனாகவிருக்குமொருவன், ஜ்வரம் அடித்துக்கொண்டிருக்கும்போது, அந்த ஜ்வரம் தணிவதற்காகக் குளிர்ந்த ஜலத்தை மேலே ஊற்றிக்கொள்ளுமொருவனுக்கு ஸமானமாவான் என்பதில் தடையுண்டோ? தன்னிடம் கோபங்காட்டியுள்ள சத்துருவைப் பௌருஷமில்லாமல் நல்ல வார்த்தைகளால் மன்றாடுவதானது, தள தள வென்று பொங்கிக் கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெயில் ஜலத்தைத் தெளிப்பதற்குத்தான் ஸமானமாகும். அதாவது பொங்கு

கின்ற எண்ணெயில் நீரைத் தெளித்தால் அந்த எண்ணெயானது முன்னிருந்ததைவிட அதிகமாகப் படபடவென்று கொதித்துக்கொண்டு நம்முடைய சரீரத்திற் பட்டுப் புண்ணுண்டாக்குவது போலவே, கோபத்துடன் கூடிய சத்துருவை நல்லவார்த்தைகள் சொல்லி மன்றாடினால், அவன் அதிக கோபங்கொண்டு நம்மை இன்னும் அதிகமாகப் பீடிப்பான். இவ்விதம ஆலோசனை சொல்ல வேண்டியிருக்க, இப்படிச சொல்லாமல், "பொறுமையாக இருந்து காரியம் செய்யவேண்டும்" என்று ஆலோசனை சொல்லுகின்றவன், பெயருக்கு மாத்திரம் மந்திரியே யொழிய, உண்மையில் சத்துருவே [illegible]ன்.

[தொடரும்.]

S. Parthasarathy,

Rama's series No. III Tamil.

நீதிமஞ்சரி விளக்கம்.

முகவுரை.

அதிகாலை நேரங்களில் என்னுடைய தியானத்தில் எனக்கு ஞாபகத்துக்கு வருகிற ஸ்ரீ வேங்கடேசப்பெருமானின் பிரார்த்தனையை ஒருவாறு எடுத்துரைக்கக் கருதுகின்றேன். இந்தப் பிரார்த்தனை மற்றவர்கட்கும் உதவுமாறு வெளிப்படுத்த அவரது வியக்தமான அனுமதியை யான் பெற்றமையின், அது லோகோபகாரமாகவே, எடுத்துரைக்கற்பாலது. ஆகவே முகவுரையை விஸ்தரிக்கவேண்டிய அவசியமில்லை.

இதனைப் படிப்பவர்கள் பிராதக்கால அனுஷ்டானங்களை முடிக்குங்காலத்தும், இயன்றால் அதிகாலையிற் படுக்கையைவிட்டு எழுமுன்னும் பொறுமையுடன் தியானித்துச் சிந்தனைசெய்து தங்கள் தங்கள் மக்கள்குழாம் பந்துமித்திரர் இவர்கட்கு உதவிபுரியுமாறு அர்த்த புஷ்டியுடனே படித்துக்காட்டிப் போதித்து எடுத்துரைக்க வேண்டுகின்றனன்.

மதிப்புரை.

சொல்லுதல் யார்க்கும் எளிதாகும்
சொல்லிய வண்ணம் செய்த லரிதாகும்.

௧. உயர்குடிப்பிறப்பு.

இவ்வுலகின்கண் எழுபிறவியிலும் மானிடப்பிறவி கிடைப்பது அரிது. கற்புடைய தாயின் வயிற்றிற் றோன்றி உயர்குலத்துதிப்பது மிகவும் அரிது. கூன் குருடு முடம் முதலிய அங்கக்குறைவின்றிப் பிறப்பது அதனினும் அரிது. புண்ணிய பாவம் தெரிந்து விதித்தன செயலும் விலக்கியன நீத்தலும் அரிதரிது. குற்றமற்ற பொருளீட்டல் மிகவும் அரிது. சுத்தமனம் கிடைக்கப்பெறின் நற்பேறேயாகும். தெய்வபக்தி யுதிப்பது மகா அருமை. திருப்பதி உயர் குன்றின் மிசை வீற்றிருக்கும் வெங்கடேசப் பெருமானே!

௨. நன்மனைவி.

மனம் ஒப்பிய பத்தினியாயும் சாந்தமுடன் சம்பாஷிப்பவளாயும் அதிசுந்தரியாயும் கோபம் சிறிதுமின்றி அரோக திடகாத்ரம் வாய்க்கப்பெற்றவர்க்குப் பிறந்தவளாயும் நாற்குணமும் வாய்ந்து மரியாதை புரிபவளாயும் விருந்தினரிடம் வாத்ஸல்யம் உள்ளவளாயும் புருஷனுக்கு இயைந்துநடந்து வெகுபுத்திரபாக்கியத்துடன் மனதொத்துச் சுகித்துப் பிறர்வீடு புகாதவளாயு மிருப்பவளே நன்மனைவி. தெய்வமே! நீ யறியாததுண்டோ? குன்றேறி நிற்கும் குணநிதியே! வெங்கடேசப் பெருமானே.!!

௩. சத்புத்திரரையடைதல்.

தருமசிந்தையுடையவனாகவும் கொடையாளியாகவும் செல்வவானாகவும் இருக்கும் வேளையில் உற்பவித்தும், மாதா பிதா குரு முதலானவரைத் தெய்வமெனக் கருதித் தொண்டு செய்தும், தொன்று தொட்ட இஷ்ட தெய்வ வழிபாடுசெய்தும், தக்கவர்க்குத் தகுதியாய் நடந்தும், கல்வியறிவுகொண்ட சத்சகவாஸங்களைச் செய்துமுள்ளவனே சத்புத்திரனாவான். அசல மிசை வீற்றிருக்கும் வெங்கடேசப் பெருமானே!

452

4. சகோதர ஒற்றுமை.

உடன் பிறந்தார்க்குற்ற ஆபத்துக்களைத் தமக்கு நேர்ந்தனவாகப் பாவித்து உதவியும், அவர் மகிழும்போது தாம் மகிழ்ந்தும், தமது திரவிய லாபம் அவர்க் கீந்தும், அவர்க்குண்டாகும் பெருமையைக் கண்டு கொண்டாடியும், அவர்க் குற்ற சிறுமை கண்டவுடன் முயன்று ஒழித்தும், தமது தர்ம பலன்களை அவர்களும் பெறும்படியாகக் கடவுளை வாழ்த்தியும். தம் உடல் பொருள் ஆவிகளை அவரதாக எண்ணியும், ஐகமத்யமாக இருக்கும் சகோதரர்களே ஒற்றுமையுடைய சகோதரர்களன்றோ? பள்ளிகொண்ட பெருமானே! வெங்கடேசா!!

5. ஆசாரியன் தன்மை.

வேதசம்பந்த சகல நூலாராய்ச்சி, ஆகம சாஸ்திர புராண இதிஹாஸ பூத பௌதிக பூகோள ககோள சாஸ்திரத் தேர்ச்சி, நவீன கதா சரித்திர நானாவித தேச குண விசேஷ பரீக்ஷையில் முயற்சி, பற்பல மானுட சுபாவ நாகரிக மரியாதை, பழக்க வழக்க நவிற்சி, யாத்ரா விஷய சாதுசங்க வித்யா முதிர்ச்சி, மனவுறுதி. பூததயை. பச்சாத்தாபம், ஆசார நியம யோகாதி அநுஷ்டானப் பயிற்சி, உண்மை பேசல். பொறுமை, சீடரிடத்துப் பரிவு, இதர மதத்தில் துவேஷமின்மை, அவைகளில் தெரிந்த ஞானம், லௌகிகவிஷய நீதி, உலகப் பற்றில் அபேக்ஷை தெய்வபக்தியுடைமை, மோக்ஷ இச்சை, பற்று நீங்கி நித்யானந்த மடைய முயலல், அரிஷட் வர்க்கங்களில் லஜ்ஜை. நீதி முறையி லப்பியாஸம், உத்தம போதனுமுறை. இவ்வயுடையவர் அன்றோ ஆசாரியர். மலைமேல் வீற்றிருக்கும் குணமிர்த வெங்கடேசப் பெருமானே!

N. R. இராமசுவாமி ஐயர்,
உபாத்தியாயர்
... ...ராரத்தார் கல்விச்சாலை
திருவப்பூர், புதுக்கோட்டை.

ஸ்ரீ

எப்பொழுது வேதாந்தம்? எதற்காகவேதாந்தம்?

(375-ம் பக்கத் தொடர்ச்சி.)

லௌகிகமே வேதாந்தம். அது எப்படியென்று நம்மில் பலர் அறியார். வினாவிடையாக எழுதப்பட்டுள்ள சுருதியை வாசித்தறியாதவன், நமது க்ரந்தங்களைப் பார்த்து, அதிக உற்சாகத்தோடும், ஆச்சரியத்தோடும், " இந்துக்களுடைய தூக்கமும் வேதாந்தம், சாப்பாடும் வேதாந்தம், உத்தியோகமும் வேதாந்தம், சுருங்கச் சொல்லின் எல்லாம் வேதாந்தமே. " என்று தொகுத்திருக்கிற மாக்ஸ் முல்லர் (Max Muller.) என்பவருடைய மொழிபெயர்ப்பையாவது வாசித்தறிந்துகொள்வது நியாயமும் நலமுமாகும். அங்ஙனமுஞ் செய்யாமல் சுருதியையும் படித்தறிந்துகொள்ளாமல் அவ்விஷயங்களைப் பற்றிப் பெரியோர்களைக் கேட்டேனுந் தெரிந்துகொள்ளாமல், எதனையும் வாசிக்காமல் வாசித்தவனாக வேஷம்போட்டுக்கொண்டு திரியும் ஒரு போலி ஞானியினுடைய தவறும் அநுபவமில்லாதவைகளுமான வார்த்தைகளை நம்பி வேதாந்தாடவியை விட்டுத் தான் வெளிவந்துவிட்டதாக அகமகிழ்ந்து, ஒருவன், " பாசாடவிக்குளே சென்றுகொண்டிருந்தாலும் இரண்டுந் தனித்தனி. " என்று சொல்லுவதைக் கேட்டுக் கேட்டு நமது காதும் செவிடுபட்டுப் போய்விட்டது. இது மிக்க பேதைமை.

நமது சந்நிதானமாகிய பிரக்ஞானந்த ஸரஸ்வதி சுவாமிகள் சொல்லும் உதாரணக் கதையைக் கவனியுங்கள்:—

ஓர் கிதாஹால் (Hall) சந்நிபாவி வேதாந்தம் படிக்கிறார். அது தெளிந்த நடையிலிருக்கிறது. ஆனால், பொருள் அதிகம் உள்ளது. இதனைப் பண்டிதரும் பாமரரும் அறிவார். இவரது கீர்த்தி பரவிற்று. அதனால் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் வருவது வழக்கம். இப்படிச் சிலநாட்கள் சென்றபின்னர், ஒரு தமது சமீபத்தில் உட்கார்ந்திருந்த மைந்தனைப் பார்த்து, " ஏன் இரண்டு நாட்களாக வரவில்லையென்று கேட்டவுடனே, அந்தப் பையனுக்கு அப்புறம் உட்கார்ந்துகொண்டிருந்த ஓர் பெரிய கிழவன் தூபம்போட்டதுபோல் கிளம்பி அவன் தன் மகனென்றும், தானே ஒருமாத காலமாகக்

கேட்டுக்கொண்டிருந்தும் ஒருவிதமான உணர்ச்சியும் உண்டாகவில்லையென்றும், லௌகிகமும் வைதிகமும் வெவ்வேறானபடியால், இதனைப் பையன் வந்து கேட்டுக்கொண்டிருந்தால் கெட்டுவிடுவானென்றும், "தோன்றுகின்றவெல்லாம் பொய், உலகம் மாயை" என்று சுருதி சொன்னபோதிலும் அது பிரத்தியக்ஷத்தில் இல்லையென்றும், "எல்லாக் காரியங்களும் வேதாந்தமே, எல்லாவற்றையும் மாயைவந்து மூடிக்கொள்கின்றது, விலக்க முயன்றால் அதிக பலத்துடன் வரும், ஆனபடியால் ஒன்றிலும் அதிக அபிமானம் வைக்காமல் இருத்தல் வேண்டுமென்று நீங்கள் மாரிபோற் பொழிந்தாலும் மாயை உலகில் கிடையாதென்றும் ஒரு பாட்டம் மழை பொழிந்ததுபோற் புகன்றார். சந்நியாசி யாது சொல்லுவார்? புன்சிரிப்புடன் இருந்தார். பிறகு அந்தக் கிழவர் வீடுபோய்ச் சேர்ந்தார்.

"இந்தக் கிழவர் தடுக்கமுடியாத கர்மவசத்தினால் அயல் நாட்டுக்குச் சென்றிருந்தார். இவருக்குச் சத்துரு ஒருவனுண்டு. இவனுடைய உபாயத்தினால் நடந்திருக்குமென்று ஊஹிக்கக்கூடலாமான ஒரு ஆச்சர்யம் அவ்வூரில் நடந்தது. என்னவெனில்:—"அவர் அவம்ருத்யுவினால் திடீரென்று இறந்துவிட்டார். அதனால் அவர் போன்ற உருவமொன்று பேய்போலப் பல இடங்களில் தோன்றிக்கொண்டிருக்கிறது. ஒருகால் ஊருக்கு அந்த உருவம் வந்தாலும் வரும், ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது" என்பதே. இந்தத் தந்தியைப் பெற்றவுடனே அங்குள்ளார் தீர்க்காலோசனைசெய்தும், அந்தக் கிழவருக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்து முடித்தனர். சில நாட்கள் சென்று, இந்தப் பிராமணன்வீடுவந்து சேர்ந்தனர். பல ஊர்கள் திரிந்தும் நடந்தும் வந்ததனாலும், வேளைக்கு ஆகாரம் கிட்டாதிருந்தமையாலும், உருவம் மாறியிருந்தார். அவருக்கு வீட்டில் நடந்ததொன்றுமே தெரியாது. நேரம் மாலையாக இருந்தது. உருவம் தோன்றியவுடன் எச்சரிக்கைப்படியே அவரை வெளியே தள்ளிக் கதவையடைத்துவிட்டார்கள். இச்செய்தி ஊர் முழுவதும் பரவியது. இவருக்கும் சங்கதி தெரியவந்தது. என்ன செய்வார்? பாவம்! ஓடினார் சந்நியாசியிடம். கதறினார் ஓலமிட்டார். இரண்டு நாட்களாக ஆகாரம் கிடையாது. கொடுப்பார்

யாருமில்லை. சந்நியாஸி, இவர்மேல் இரக்கம் கொண்டு, நிகழ்ந்தவற்றையெல்லாம் விவரமாகக் கேட்டு, அவரது சத்துருவையும் வருவித்து, இருவருக்கும் நீதிகளைப் போதித்து, இருவரையும் சிநேகிதர்களாக்கி, கிழவரையும் ஜனக்கூட்டத்துடனும் பந்துக்களிடமும் சேர்த்துவிட்டனர். அப்போது அவர் 'வைதிக மாயை லௌகிகத்திலும் வந்துவிட்டதே' என்றார்."

வேதாந்தத்திற்கு வேண்டிய குணங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் வேண்டியிருக்கின்றன. அவை, சாந்தி (பொறுமை), சத்சங்கம், திருப்தி, விசாரம் (கேள்வி), இந்திரிய நிக்ரஹம் (அடக்கம்) முதலியன.

நாம் நம்முடைய வர்ணத்துக்குரிய தொழிலை விட்டு, உத்தியோகத் தொழிலே முக்தியென்று நினைத்துக்கொண்டு திரிகின்றோமாகையால், நமக்குப் பொருளும் இல்லாமற்போயிற்று. யார் எதைச் சொன்னாலும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தோமானால் பிழைத்தோமாவோம். அந்தப் பொறுமை கெட்டாலும், வேதநாயகம்பிள்ளை சொல்லியுள்ளபடி, "நான் ஆயிரம் தொழில் அறியாத சங்கதியா?" என்று இருந்தாலும் குடிக்கிற ஓடும் போய்விடும். இந்தச்சமயத்தில் ஒருவிஷயம் ஞாபகத்துக்கு வருகின்றது: "ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு துரை மேல்விசாரணைக்குப் போயிருந்தாராம் அப்போது, எதற்காகப் பள்ளிக்கூடத்தில் வந்து வாசிக்கின்றீர்கள்? என்ற வினாவொன்று வந்தது. உடனே, மாணவர்கள், "படிப்புக்காகவென்றாவது, தேச நன்மைக்காகவென்றாவது, கைத்தொழில் அபிவிர்த்திக்காகவென்றாவது மறுமொழி சொல்லத் தெரியாமல், "சர்க்கார் உத்தியோகத்திற்காக" என்று சொன்னார்களாம். உடனே அதனைக் கேட்ட துரை சிரித்தாராம். இது "கொக்குக்கு ஒன்றே மதிபோன்" றிருக்கின்றது.

உத்தியோகம் வேண்டுமென்று மனுப்போட்டால், பஞ்சாங்க மூட்டையை அவிழ்க்கச் சொல்லுகிறார்கள். அதாவது, நற்சாக்ஷி, பரீக்ஷைப்பத்திரம், S. S. L. C. முதலியவற்றைக் கேட்கிறார்கள். அப்படி அவற்றைக்கொடுத்தபோதினும், உத்தியோகத்தில் போட்டியுண்டாகிறது. எத்தனைதான் பரீக்ஷையில் முதன்மையாகத் தேர்ச்சி

பெற்றிருந்தாலும், துஷ்ட ஸகவாஸம் படிந்திருந்தால், பயன் கிடைப்பதில்லை. கடையைக்கட்டத்தான் வேண்டி யிருக்கின்றது. இந்த லௌகிகத்துக்கே இவ்வளவு வேண்டியிருந்தால், வேதாந்தத்துக்கு இன்னும் எத்தனை வேண்டியிருக்கும் பாருங்கள்.

உள்ளதைக்கொண்டு திருப்தியடைதல் வேண்டும். "தோழனுடனும் ஏழைமை பேசேல்" என்னும் முதுமொழியையடியோடு நிறுத்திவிட்டு, குடும்பத்துக்குப் பற்றவில்லை என்று பலரிடஞ் சென்று கெஞ்சின பிறகு, அப்பால் கிடைத்ததைக் கொண்டும் திருப்தி யடையாமல், அடிக்கடி பெரியவர்களைச் செல் அரிப்பது போல அரித்துக்கொண்டிருந்தால், "இந்த மனிதனுக்குக் கொஞ்சங்கூட விவேகம் இல்லை. "ருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவும்." என்று நினைத்து ஒரு ஸ்க்ரூ (Skrew) போட்டுவிடுவார்கள். தன்னைக்காட்டிலும் பணக்காரர்களைப் பார்த்துப் பொறாமைகொண்டு கைநீண்டு செலவு அதிகப்பட்டால் எல்லாருக்கும் கள்ளனாய் எழ் பிறப்பும் தீயனாய் நல்லார்க்கும் பொல்லனாகும்படி தானாகும். மேல் வரும்படியும் (Bribe) திருட்டாகத்தான் முடியும். இரண்டுபேர்களும் ஒத்துச் செய்தாலும், நியாயமாய்ச் சம்பாதித்த பொருளிலேயே பற்று விடுவது துர்லபம்; என்றால் இந்த அநியாயப் பொருளிலே அதிக துன்பம் வராமலிருக்குமா?

ஆய்ந்து ஓய்ந்து பாராத காரியம் தான் சாந்துயரம் தரும். புத்தி நுட்பமாய் அறிந்து தம் தம் வேலையைச் செய்வதே போற்றற்பாலது. அன்றேல், சாகக்கடவது; இது இகத்தில் மரணத்தோடு நிற்கும். காரண காரியத்தோடு செய்யாமற் போனால் குட்டி வேதாந்தம் குடியைத்தான் கெடுக்கும்.

இந்திரிய நிக்ரஹம் என்றால், இந்திரியங்களை அடக்குதல் என்பதாகும். ஓர் எஜமானன், தனது குதிரையை மேடு பள்ளம் முதலியவைகளில் செல்லவிடாமல், சரியான ரஸ்தாவில் போகும்படி முயன்று ஜயிப்பதுபோல இந்திரியங்களை (கர்மேந்திரியங்கள்-5. ஞானேந்திரியங்கள்-5. பிராணாதி வாயுக்கள்-5. புத்தி, மனது) போகும் போக்கில் விடாமல் தடுத்து நன் மார்க்கத்தில் செலுத்த

முயலவேண்டும். 'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்றார் ஔவைப்பிராட்டியார். அவைகளை (இந்திரியங்களை) அடிமையாக்கிக்கொண்டிருந்தால், இகத்தில் புகழையும் பொருளையும் பெறலாம். பரத்தில் முக்திச் செல்வத்தையும் கொடுக்கும். (Like fire which is a good servant but a bad master) பெரும்பாலும் இவைகள் போகிற வழி காமம், குரோதம், லோபம் முதலியவைகள் நிறைந்த வழி. வேறு வழிகள் இல்லை. காமக் குரோதம் முதலியவைகளை விட்டுவிடவேண்டியதுதான் என்றாலும், சாஸ்திர சம்பந்தமான கர்மங்களைச் செய்வதனால் தோஷம் சம்பவியாது. விவாஹம் காமத்தின் பொருட்டேயன்று. மீறி நடந்தால்தான் தோஷம். இதனைத்தான் காமமென்று நிந்திப்பது. குழந்தைகளுக்கு விளையாட்டில் பிரியம் அதிகம்தான் என்றாலும், அது நமக்கும் சந்தோஷந்தானென்றாலும், தீப்பெட்டி கத்தி முதலியவைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதைக் கண்டு கோபிப்பது கோபகுணத்தில் சேர்ந்தது அன்று.

பகவத்கீதை. அத்தி-6. சுலோ-6.

"எந்த ஜீவாத்மாவினாலே தேகம் இந்திரியங்கள் என்றவற்றின் சேர்க்கையை யடைந்த ஆத்மா, அவைகளின் வசப்பட்டதாக இருக்கின்றதோ,— அதாவது எவனானவன் தேஹேந்திரியங்களை வென்றிருக்கிறானோ அவனுக்கு அவன்தான் சிநேகிதன். மற்றும் இந்திரியங்களை ஜயிக்காதவனுக்கு வெளிச் சத்துருவைப் போலத் தானே பகைமையிலே இருக்கின்றான். அதாவது தன்னைக்காட்டிலும் வேறாய் வெளியில உள்ள சத்துரு தனக்கு எப்படி தீமைசெய்வானோ அப்படியே தனக்குத்தானே தீமை செய்துகொள்வதிலே இருக்கிறான்.

ஆகையால் லௌகிகம் வேதாந்தம் என்று ஏன் இயம்பலாகாது. சுருதிகளும் பேசுகின்றன.

[இன்னும் வரும்]

புதுவை பி. ஆர். வெங்கடராமன்,

நாவலிஸ்ட்.

புதுக்கோட்டை.

உ

புதுக்கோட்டை ராஜ்யம்.

(434-ம் பக்கத்தொடர்ச்சி)

கல்வியிலாகா.

நமது மாகாணத்தில் உயர்தரக்கல்வி விஷயமானது மிகவும் விருத்திக்குக் கொண்டுவரப்பெற்றிருக்கின்றது என்னும் விஷயம் நன்கு கவனிக்தற்குரியது. 1878-ம் வருஷத்தில் சுமார் 70 மாணவர்களடங்கியுள்ளதாக இருந்த ஒரு லோயர் ஸெகண்டரி ஸ்கூலானது சிலவருஷங்களுக்குள், ஒரு புகழ்பெற்ற ஸெகண்டு க்ரேட் காலேஜாக விருத்தி யடைந்திருக்கின்றது. 1879-ம் வருஷத்தில் கட்டப்பெற்றிருந்த பள்ளிக்கூடக்கட்டிடமானது பெருகிவரக் கூடியதான மாணவரது தொகைக்கு இடம் பற்றாததாக இருந்தது. 1891-ம் வருஷத்தில் காலேஜானது தற்போதிருக்கும் ஸ்திதிக்குக்கொண்டுவரப்பெற்றதாகிய ஒரு சேர்த்தியான புத்தகசாலையையும் பெற்று, டெனிஸ்பாட்மிண்டன் க்ரிக்கட் முதலிய பந்து விளையாட்டுகளும் ஏனைய விளையாட்டுகளும் ஆடி மாணவர் தேகாப்பியாஸத்தையும் மனோல்லாஸத்தையும் மேன்மேலும் பெற்றுவரத் தகுந்ததாகச் சேர்த்துக்கொள்ளப்பெற்றதொரு விசாலமான தோட்டத்தையும் பெற்றுள்ளதாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்பக்கல்வி விஷயமாக முன் திவானாக இருந்த மிஸ்டர் சேஷையா சாஸ்திரியார் அவர்கட்கு, தற்காலத்து வழக்கத்தில் கொண்டுவரப்பெற்றது ஒழிந்த முறையிலே அது நடத்தப்பெறல் வேண்டுமென்ற நோக்கமிருந்தது. சாமான்யமான அநுபவத்திற் கொண்டுவரப் பெறாத இலக்கியப் பயிற்சியானது மாணவர்க்குப்பயன் தராததென்றும் பூர்த்தியடையாத கல்வியென்றும் அவர் நினைத்திருந்தனர். கேவலம் உதரபோஷணார்த்தம் கற்றுக்கொடுக்கப்பெறும் கல்விக்காக மாணவர்களின் பொருட்டுப் பெருங்காலத்தையும் பெரும்பணத்தையும் செலவிடுதல் பெருந்தவறென்றும், இதே பயனைச் சாதாரணத் திண்ணைப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் சொற்பச்செலவில் வெகு சுலபத்தில் கொஞ்சக்காலத்திற்குள்ளே கொண்டுவரக்கூடிய முறையில் பயிற்றுவித்துக்கொண்டிருக்கிறார்களென்றும், இம்முறையே பரம்பரையான வழக்கமென்றும், திண்ணைப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள், ஒருவனுடைய ஜீவியகால வாழ்வுக்குப் போதுமானதான கணக்குவகைகளை மனப்பழக்கத்திலேயே அதிசுலபமான மார்க்கத்தில் பயிற்றுவித்துக்கொண்டிருக்கும்போது, அதே பிரயோஜனத்தை வெகுகாலத்தில் அதிக ஆடம்பரமான செலவுடன் கற்பலகையிலும் காகிதத்திலும் எழுதக் கற்

ளுக் கொடுப்பதாற் பெறக்கூடியது யாதொரு விசேஷமுமல்லவென்றும் அவர் மதித்திருந்தார். ஆகையால், அநேகதிண்ணைப்பள்ளிக்கூடங்கட்கு வேண்டிய உதவிகளை ஸமஸ்தானத்தார் செய்துகொடுத்தும் பணவுதவியை க்ராண்ட் மூலமாக உதவியும், தற்காலமுறைப்படியாகத் தேசசரித்திரத்தையும் பூகோளசாஸ்திரத்தையும் பயிற்றும்படி தூண்டியும் வருவதே அவசியமானதென்றும் அவர் கருதியிருந்தார். ஆதலினால், இம்முறையையே வழக்கத்துக்குக் கொண்டுவருவதற்கென்று, சிலவிதிகளும் ஏற்படுத்தப்பெற்று, பள்ளிக்கூடங்களைக் கிராண்ட்பெறத் தகுதியுள்ளவைகளாக ஆக்கும்படி பரீக்ஷாதிகாரிகளும் ஏற்படுத்தப்பெற்றார்கள். அந்த வருஷமாகிய 1885-ம் வருஷத்தில் ஸமஸ்தானத்தில் 13-பள்ளிக்கூடங்கள் க்ராண்டுக்குத் தகுதியுள்ளனவாகச் செய்யப்பெற்றன.

வித்யாகர்வத்தை விசேஷித்துக் காட்டக்கூடிய தற்காலத்து முன்னேற்றக் கல்விக்கு அம்முறையானது ஒவ்வாமலே இருந்தது. அதனால் ஒவ்வொரு இலாகாவிலும் முன்னேற்றமடைந்துகொண்டிருக்கிற ஸமஸ்தானத்தில், இந்தக்கல்வி யிலாகாமாத்திரம் முன்னேற்றத்துக்கு வரப்பெறாமலிருப்பதும் ஒரு குறைவாகத்தோன்றினபடியால், நவீனமுறையில் கல்வியிலாகாவைக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கமே ஸமஸ்தானத்தில் பரவியிருந்தது. ஆதலினால் அம்முறைக்குவேண்டிய உபாயங்களைச் சொல்வதற்கென்று, சில மேதாவிகள், மதராஸ் இராஜதானியிலிருந்து, 1907-ம் வருஷத்தில் அழைக்கப்பட்டனர். ஆரம்பக்கல்வியைத் திருத்திக்கொண்டுவருவதற்கு வேண்டிய முறைகளை ஆலோசிப்பதற்கென்று ஒரு ஆலோசனைக் கூட்டமும் கூட்டப்பெற்றது. இதனைக் காரணமாகக்கொண்டு மாகாணத்தில், பல பள்ளிக்கூடங்கள் புதிய முறையில் ஆரம்பிக்கப்பெற்றன. மேலும் மேலும் தக்க உயர்ந்த உபாத்தியாயர்கள் இந்த முறையில் உழைத்து ஊதியம் பெறவேண்டுமென்ற நோக்கத்தைப் படித்த பெரியவர்கள் கொள்ளும்படியாகப் பள்ளிக்கூடத்துச் சம்பளங்கள் உயர்த்தப்பெற்றன. தற்கால முறையைப் பின்பற்றிக் கல்விபயிற்றும்படியாகக் கிராமாந்தரத்து உபாத்தியாயர்களைத் தயாரித்துவிடுவதற்கென்று, ஒரு ட்ரெய்னிங் ஸ்கூலும் ஏற்படுத்தப்பெற்றது. வித்யாவிதிகள் புதிதாக ஏற்படுத்தப்பெற்றன. புதிதான பரீக்ஷாமுறையும் க்ராண்ட் முறையும் ஏற்படுத்தப்பெற்றுச் சீர்திருத்தஞ் செய்யப்பெற்ற இந்த முறைகள் அநுபவத்துக்குக் கொண்டுவரப்பெற்றபோது, போதனாமுறையிலும் விசேஷமாறுபாடுகள் செய்யப்பெற்றன. ஆக, இம்முறையில் 1912-ம் வருஷத்தில், மாகாணத்தாராலும் மாகாணத்தார் உதவியாலும் சுமார் 300-பள்

ளிக்கூடங்கள் 14,000 மாணவர்களுடன் கல்வி பயிற்றப்பெற்று வந்தன.

சாதாரணமாக, உழவு பயிரிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் அதாவது செல்வமுள்ள குடிக்கணக்காரர்கள் வீடுகளில், குடும்பக் கல்வியைப்பாதுகாக்கு வைத்திருக்கவேண்டுவதன்பொருட்டு, தங்கள் குடும்பத்தில் ஒரு குமாரனைப் பள்ளிக்கூடத்தில் விட்டுப்படிக்க வைப்பதும், அவன் சிறிது கற்றவுடன் நிறுத்திவிட்டுக் குடித்தன வேலையைப்பார்க்கச் சொல்லுவதும் வழக்கமாயிருந்தது. ஆனதால் கல்விபயிலும் மாணவர்கள் அதிகமாகக்கிடைப்பது அரிதாகவே இருந்தது. எனினும், நாம் மேலே சொல்லி வந்த நவீனமுறையில் ஏற்படுத்தப்பெற்ற ஆரம்பக் கல்வியானது விருத்தியை அடைந்து கொண்டே வந்தது. மிஸ்டர் G. C. மேலோனி என்பவர் தமது சென்ஸஸ் ரிபோர்ட்டில் 1911-ம்வருஷரிபோர்ட்டில் சென்னை இராஜதானியில் ஆயிரத்தில் 75-பெயர்கள் தான் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களென்றும், நமது மாகாணத்தில் மொத்தத்தில் 30,000 பெயர்கள் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்றும் குறித்திருக்கின்றார். ஆக நமதுமாகாணம் கல்வி விஷயத்தில் எவ்வளவும் குறைந்திருக்கவில்லையென்றும் நன்றாய்த்தெரியவருகின்றது.

B. 1911-ம் வருஷம் ஏற்பட்ட டிலலிதர்ப்பாரையனுசரித்து நமது ஸமஸ்தானத்து மஹாராஜா அவர்களும், ராஜதானியில்லாத மற்றவைகளான மாகாணத்தைச்சேர்ந்த நாடுகளிலுள்ள ஜனங்களெல்லாருக்கும், ஆரம்பப்படிப்பை இலவசமாகவும் செய்துதவியிருக்கின்றார்கள்.

மகாராஜா அவர்களால் சன்மானிக்கப் பெற்ற இப்பேருதவியால், மாகாணத்தில் படிப்பின் விருத்தி யதிகமாகக் காண்பிக்கப்பட்டு வருவதுடன், நவீனமுறைப்படி யமைக்கப்பெற்ற தாழ்ந்தரப்படிப்புச்சாலைகள் மிகவும் ஊக்கங்காட்டி வருகின்றன.

பெண்கட்கு மாத்திரம், மொத்தில் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்ததாக 17—பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அவற்றுள் 6 மகம்மதியப் பெண்கட்கென்றும் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சமஜாதிப் பெண்கட்கென்று ஒருபள்ளிக்கூடம் ராஜாங்கத்தாரது உதவி பெற்று நடந்தேறி வருகின்றது. 1912—ல் இப்பெண்கல்விச்சாலையில் படித்துக்கொண்டிருந்த பெண்களின் தொகை 1200. ராஜதானிப் பட்டணத்தில், சம்ஸ்க்ருதத்துக்கென்றும் ஒருபள்ளிக்கூடமிருக்கின்றது. தசரா உத்ஸவத்தின்போது, மாகாணத்திலிருந்தும் வெளியிலிருந்தும் தக்க படிப்பாளிகள் தர்ப்பாருக்கு வந்து பரீக்ஷிக்கப்பெற்றுத் தக்க ஸன்மானமும் பெற்றுப்போகின்றார்கள்.

பத்திராதிபர்.

சபைநிகழ்ச்சிக் குறிப்பு.

ஆதனக்கோட்டை உபாத்தியாயர் சங்கத்தின்
8-ம் ஆண்டு பூர்த்திக் கொண்டாட்டம் (20-12-1918)

சங்கத்தின்மெம்பர்கள் **25**-க்கு ஆஜராயிருந்தவர்கள் **18** மெம்பர்கள்

சுமார் 10-30-க்குக் கடவுள் பிரார்த்தனைப்பாட்டுகள் சிலமாணவர்களால் இசைக்கருவியுடன் பாடப்பெற்றவுடன் ஸ்ரீ ஸ்கூல் சூப்பரிண்டெண்டெண்டவர்களும் கீழஸர்க்கிள் இனஸ்பெக்டரவர்களும் விஜயம் செய்யச் சூப்பரிண்டெண்டெண்டவர்களால் அக்கிராசனம் வகிக்கப்பட்டது.

1. சங்கத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றி ஆதனக்கோட்டை ஸ்டேட்ஸ்கூல் மாணாக்கர் இருவர்களால் பீடிகையாக வினாவிடை ரூபமாக ஸம்பாஷணை செய்யப்பட்டது.

2. சங்கத்தின் செக்ரடரியால் ஷை சங்கத்தின் வருஷாந்தர ரிபோர்ட்டு சுருக்கமாய் வாசிக்கப்பட்டது.

3. 2-வது வகுப்பு மாணாக்கன் கருப்பய்யா V. என்பவனால் 1வது வகுப்புக்குச்சதுர அங்குலத்துக்கும் அங்குலச்சதுரத்துக்கும் (Space work) உள்ள வித்யாஸத்தை எடுத்துக் காட்டிக் கணக்கு மாதிரிப்பாடமாகப் போதித்துக் காட்டப்பட்டது.

4. 4-வது வகுப்புமாணாக்கனுகிய சின்னையன் V என்பவனால் பாலர் வகுப்புக்கு அறுசுவையைப்பற்றிய பாடம் மாதிரிப்பாடமாகப் பல வஸ்துக்களை நேரில் கொணர்ந்து பிள்ளைகளைச் சுவைக்கச் செய்து போதித்துக்காட்டப்பட்டது.

5. இது சம்பந்தமாகச் சேர்மென் அவர்கள்வந்திருந்த உபாத்தியாயர்களான மெம்பர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும், மனதுருகும்படி, பலதிருஷ்டாந்தக் கதைகளுடன், அவரவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தாற்றான் உய்வுண்டு என்பதைவிளக்கிக் காட்டிச் சுமார் 12-45 வரையில் போதனைசெய்தார்கள். பிறகு உண்டியருந்தநேரமாய்விட்டபடியால் எல்லோருக்கும்விடைஅளித்து மறுபடி 2-மணிக்கு வந்துசேரும்படி அனுமதி கொடுக்கப்பட்டது.

6. 2 மணிக்கு எல்லோரும் கூடியவுடன் சேர்மென் அவர்கள் அனுமதியின் பேரில், அண்டக்குளம் ஸ்டேட்ஸ்கூல் ஹெட்டீச்சர் P. L. வெங்கடராமையர் அவர்களால சென்ற 100 வருஷங்களுக்கும் இனிவரும் 100 வருஷங்களுக்கும் அந்தந்த தேதி கிழமைகள கண்டுபிடிக்கச் சிலகணக்குகள் தயாரித்து வந்ததைப் பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டது. அந்தக்கணக்குகளைக் கரும்பலகையில் போட்டுப்பார்த்தபோதும் சரியாக வந்ததைப் பார்த்து அக்ராசனாதிபதியவர்களாலும் இன்னும் மற்றவர்களாலும் சந்தோஷத்துடன் அந்தக்கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

7. 4-வது வகுப்பு மாணாக்கனாகிய S. நாராயணசாமி என்பவனால் மலைகளில் நதிகள் உற்பத்தியாகிப் பள்ளக்கால்களில் பாய்வதைக்காட்டுவதற்காக மாடல் (களிமண்ணால்) செய்து காட்டப்பெற்று 1—வது வகுப்புக்கு மாதிரிப்பாடமாகப்போதித்துக்காட்டப்பட்டது.

8. 4-வது வகுப்பு நடேசன் G. என்பவனால் நெருப்பு எரியவும், நாம் மூச்சுவாங்கவும் வெளிக்காற்று அவசியம் என்பதை விளக்க, மெழுகுவர்த்தித் துண்டுகளைக் கொளுத்தி வைத்துக் காட்டப்பெற்று 1—வது வகுப்புக்கு மாதிரிப்பாடமாகப்போதித்துக்காட்டப்பட்டது.

9. 4-வது வகுப்பு நாராயணசாமி S. என்பவனால் கிண்டர் கார்டன் டிரில் பாட்டுக்களுடன், 1-வது பாலர் வகுப்புகளுக்குப் போதித்துக்காட்டப்பட்டது.

10 ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் அஸிஸ்டெண்ட் டீச்சர் A. V. சுந்தரேசசாஸ்திரியாரால் "உபாத்தியாயர்கடமை" என்பதைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்யப்பட்டது.

11. அண்டக்குளம் ஸ்டேட் ஸ்கூல் அஸிஸ்டெண் டீச்சர் ராஜகோபாலநாயுடு அவர்களால், "பிரிட்டிஷ் அரசாக்ஷியின் நன்மைகள்" என்பதைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்யப்பட்டது.

12. ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் ஹெட்டீச்சர் R. S. பஞ்சாபகேச சாஸ்திரியாரால் டிராயிங் போதிப்பதின் ஆரம்பம் மாதிரிப்பாடமாகப் போதித்துக்காட்டப்பட்டது.

13 அண்டக்குளம் ஸ்டேட் ஸ்கூல் அஸிஸ்டெண்ட் ராஜகோபாலநாயுடு அவர்களால் 'Paper plaiting' 'காகிதம் முடைதல்' 1வது வகுப்புக்கு மாதிரிப்பாடமாகப்போதித்துக் காட்டப்பட்டது.

14. நிம்மேலிப்பட்டி ஸ்டேட் ஸ்கூல் டீச்சர் மலையப்பய்யர் அவர்களால் 'Paper folding' கடுதாசி மடித்து, பலவித உருவங்கள் செய்தல் மாதிரிப்பாடமாகப்பாலர்வகுப்புக்குப்போதித்துக்காட்டப்பட்டது.

15. கடைசியில் பெண்குழந்தைகள் கும்மி கோலாட்டம் போட்டபிறகு, மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியவர்கள் வாழ்த்துமங்களப்பாட்டுக்களுடனும் ஹிஸ்ஹைனெஸ் மகாராஜா அவர்கள் வாழ்த்துப்பாட்டு மங்களப்பாட்டுக்களுடனும் சேர்மென் அவர்களுக்கு வந்தனத்துடனும், அடுத்தமாதம் மீட்டிங்கு 24—1—19-ல் என்று சொல்லப்பட்டு வந்திருந்தகனவான்கள் முதலியவர்களுக்குச் சந்தனம், தாம்பூலம், சர்க்கரை, பழம் வழங்கப்பட்டுச் சுமார் 5½ மணிக்குச் சபை கலைந்தது. சுபம்!

Adanakottai 21—12—18. R. S. Panchapagesa Sastri. Secretary.